**ஜயா கென்டேனர் டேர்மினல்ஸ் லிமிடெட் - 2019**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

ஜயா கென்டேனர் டேர்மினல்ஸ் லிமிடெட்டின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபப நட்டக் கூற்று, ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு நான் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் கம்பனியின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கம்பனியின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக கம்பனியின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது கம்பனியின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது கம்பனியின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க கம்பனி செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தால் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்கப்பட்டுள்ள நல்லாட்சி தொடர்பான சுற்றறிக்கை | | | |
| (i) | 5.1.1 ஆம் பிரிவு | ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்தினாலும் ஒரு இணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனியால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அவ்வாறான ஒரு திட்டம் தயாரிக்கப்படவில்லை. | இணங்குகின்றேன். எதிர்காலத்தில் நிறுவனத்தினால் இணைந்த திட்டத்தினை தயாரிப்பது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நீண் தூரநோக்குடன் ஒரு இணைந்த திட்டத்தை தயாரித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |
| (ii) | 8.2.2 ஆம் பிரிவு | ஒரு அரசாங்க கம்பனியினால் குறுங்கால திறைசேரி உண்டியல்கள், நிலையான வைப்புக்கள் அல்லது ஏனைய நிதி முதலீடுகள் இடம்பெறுமாகயிருந்தால் நிதி அமைச்சின் இணக்கப்பாட்டினை (concurrence) பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 250,550,020 தொகையான முதலீட்டிற்காக அந்த இணக்கப்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். நிறுவனத்தினால் நிதி முதலீடு செய்யப்பட்டது. நிலையான வைப்புக்களில் மாத்திரம் என்பதுடன் எதிர்காலத்தில் செய்யப்படுகின்ற புதிய முதலீடுகளுக்காக நிதி அமைச்சின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரு அரசாங்க கம்பனி மிகை நிதிகளை முதலீடு செய்யும் போது உரிய இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |
| (iii) | 8.8 ஆம் பிரிவு | ஒவ்வொரு அரசாங்க தொழில் முயற்சியினாலும் ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்திலேயே செலவு மட்டுப்பாடுகளைக் காட்டி அதிகாரப் பகிர்வு (Delegation of Authority) தொடர்பாக பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரம் | இணங்குகின்றேன். எதிர்காலத்தில் அதிகாரத்தை பகிர்தல் தொடர்பாக பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆண்டின் போது கம்பனியின் செயற்பாட்டை மேற்கொள்ளும் போது அதிகாரத்தை அமுல்படுத்தும் எல்லைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பணிப்பாளர்கள் சபையின் சம்மதத்துடன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், கம்பனி மேற்கூறிய தேவைப்பாட்டினை நிறைவேற்றியிருக்கவில்லை. | | நிர்ணயித்தல் அத்தியாவசியமாகும். |
| (iv) | 9.2 ஆம் பிரிவு | ஒவ்வொரு அரசாங்க தொழில் முயற்சியினாலும் அமைப்பு வரைபடம் மற்றும் அங்கீகரித்த பதவியணியினர் பொதுத்திறைசேரியின் அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் கம்பனி மேற்கூறிய தேவைப்பாட்டை நிறைவேற்றியிருக்கவில்லை. | இணங்குகின்றேன். எதிர்காலத்தில் இதற்காக அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் மனித வளங்கள் தொடர்பான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | 9.3.1 ஆம் பிரிவு | கம்பனிக்காக முறையான ஆட்சேர்ப்பு நடைமுறையினைத் தயாரித்து பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரம் வரிசை அமைச்சின் அங்கீகாரம் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். எதிர்காலத்தில் இதற்காக அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான மற்றும் வெளிப்படைத் தன்மையுடனான முகாமைத்து வத்திற்காக ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு பந்தியில் காட்டப்பட்டுள்ளவாறு அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுதல் அவசியமானதாகும். |
| (ஆ) | 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு செயலாளரால் வழங்கப்பட்ட கடிதம் | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ‘‘2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலின்’’ பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்ததுடன் அதற்கிணங்க | இணங்குகின்றேன். எதிர்காலத்தில் இதனை அமுல்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை இனங்கண்டு அதற்கிணங்க இலக்குகளைத் தோற்றுவித்து அந்த இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகள் அடைந்து கொள்ளப்பட வேண்டிய முறைமைகள், இலக்குகளை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளை இனங்காணல் இடம்பெற்றிருக்கவில்லை. | எடுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 92,885,648 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 91,294,628 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 1,591,020 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) கட்டிட திட்டத்தை தயாரிப்பதற்காக 4 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இலங்கை துறைமுக அதிகாரசபையிடமிருந்து கம்பனிக்கு கிடைக்க வேண்டிய ரூபா 5,779,760 தொகை 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அப்பணம் இலங்கை துறைமுக அதிகாரசபையின் 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ஒரு செலுத்த வேண்டிய மீதியாக உள்ளடக்கப்படாதிருந்ததுடன் அப்பணத்தை அறவீடு செய்தல் | இணங்குகின்றேன். 2018 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட கணக்காய்வு ஐய வினாக்களுக்கு இணங்க கம்பனியால் தலைவரினால் இந்த ரூபா 5,779,760 பணத்தை தீர்த்து வைக்குமாறு வேண்டி இலங்கை துறைமுக அதிகாரசபையின் தலைவருக்கு ஒரு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. அதிகார சபையின் முகாமைத்துவ பணிப்பாளரால் 2018-11-19 ஆந் திகதி அக்கடிதத்திற்காக | நிலையான காரணத்தைச் சமர்ப்பித்து இது தொடர்பாக துறைமுக அதிகாரசபையுடன் கலந்துரையாடி இறுதித் தீர்மானத்திற்கு வருதல் அத்தியாவசிய மானதாகும். |

| | | | |
|---|---|---|---|
| | நிச்சயமற்றது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், கம்பனியால் அதற்காக நட்டங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அனுப்பப்பட்ட பதிலின் பிரகாரம் இப்பணத்தை செலுத்த வேண்டாம் எனத் தெரிவிக்கப்பட்டது. இதற்கிணங்க இச்செலவு எதிர்காலத்தில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டு நிதி அமைச்சின் அங்கீகாரத்துடன் அறவிட முடியாக் கடனாக பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியிடமிருந்த பொதுப் பயன்பாட்டு இருப்புக்களின் பெறுமதி ரூபா 1.73 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 1.2 மில்லியன் பெறுமதியான 282 விடயங்கள் நீண்டகாலமாக வழங்கப்படாது காணப்பட்டது. அவ்வாறே மேற்கூறிய இருப்பில் உள்ளடக்கப்பட்டு பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ள முடியாத விடயங்களை இனங்கண்டு இருப்பு பாதிப்புக்களுக்காக ஒதுக்கீடு செய்தலும் இடம்பெற்றிருக்கவில்லை. | இணங்குகின்றேன். நிறுவனத்தினால் இதற்காக தொழில்நுட்ப அறிவு உள்ள ஒரு உத்தியோகத்தர் ஈடுபடுத்தப்பட்டு நீண்டகாலமாக வழங்கப்படாது காணப்படுகின்ற விடயங்களை எதிர்காலத்தில் இனங்கண்டு இருப்பு நட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான இருப்புக் கட்டுப்பாட்டு முறைமையை அறிமுகப் படுத்துவதன் மூலம் நாளதுவரையாக இருப்பினைப் பேணுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |
| (இ) | கம்பனியின் எண்ணை தாங்கியை வாடகை அடிப்படையில் பயன்படுத்துகின்ற கடல்சார் எண்ணை அனுமதிப்பத்திரதாரர்கள் எட்டுப் பேருடன் கையொப்பமிட்ட உடன்படிக்கைகளின் செல்லுபடியாகும் காலம் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்திருந்த போதிலும், 2020 ஆம் ஆண்டிற்காக அந்த உடன்படிக்கையைப் புதுப்பித்தல் 2020 பெப்ரவரி 25 ஆந் திகதி வரை இடம்பெற்றிருக்கவில்லை. இதன் காரணமாக சட்டரீதியான சிக்கல்கள் ஏற்படும் ஆபத்தினை கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாதுள்ளது. | கம்பனியின் புதிய பணிப்பாளர்கள் சபையின் 2019 திசெம்பர் 23 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர்கள் சபைக் கூட்டத்தின் போது இது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. மேலும், அதன் போது தற்பொழுது காணப்படுகின்ற உடன்படிக்கை சம்பந்தமாக முறையாக ஆய்வு செய்வதற்கு மற்றும் மிதக்கும் எண்ணை களஞ்சிய தொகுதியை பேணுதல் / ஆய்வு கூட வசதியை வழங்குதல் முதலிய புதிய விடயங்கள் சம்பந்தமாக கவனித்துப் பார்ப்பதற்காக பணிப்பாளர் | உடன்படிக்கை முழுமையாகவும் நாளதுவரையாகவுமபேணுதல் மூலம் சட்டரீதியான சிக்கல்கள் ஏற்படும் ஆபத்தினைக் குறைக்கலாம். |

| | | | |
|---|---|---|---|
| | | சபை அங்கத்தவர்களான இரண்டு சட்டத்தரணிகளைக் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டது. அக்குழுவின் சிபார்சு கிடைக்கும் வரை காணப்படுகின்ற உடன்படிக்கையானது அந்த நிபந்தனையின் அடிப்படையில் 02 மாத காலம் வரை (2020/02/29) நீடிப்பதற்கு பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. அக்குழுவின் சிபார்சு 2020/01/09 ஆந் திகதிய பணிப்பாளர்கள் சபைக் கூட்டத்தின் போது கலந்துரையாப்பட்டதுடன் உள்ளடக்கப்படாத விடயங்களை உள்ளடக்கி புதிய சட்டரீதியான ஏற்பாடுகளை உள்ளடக்கும் ஒரு உடன்படிக்கையினை வரைவு செய்வதற்காக சட்டத்தரணிகளின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. அந்த புதிய உடன்படிக்கைக்கு 2020/02/28 ஆந் திகதி பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரம் கிடைத்தது. | |
| (ஈ) | கம்பனியின் 9 எண்ணைத் தாங்கிகள் சம்பந்தமாக காட்டுத் தீ பாதிப்புக்களைக் குறைப்பதற்காக ரூபா 90 மில்லியன் கிரயத்தின் அடிப்படையில் ஒரு பாதுகாப்பு முறைமையை (Installation of fire from pouring system) பொருத்துவதற்கான ஒரு பெறுகையானது 2019 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இதற்காக கேள்வியினைக் கோருவதற்கு 05/19 ஆம் இலக்க 2019 யூன் 20 ஆந் | கம்பனியின் புதிய பணிப்பாளர்கள் சபை 2019 திசெம்பர் 23 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது இது தொடர்பாக கலந்துரையாடியது இச்செயற்திட்டத்திற்குரிய உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்காக 2020/05/29 ஆந் திகதி நடைபெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட பணிப்பாளர்கள் சபைக் கூட்டத்தின் போது அங்கீகாரத்தினைப் பெற்றுக் | நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கை களுக்காக தேவையான நிர்மாணங்களை தாமதமின்றி நிறைவேற்றுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதிய பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை அது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டது. அதன் பின்னர் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் இச்செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | |
| (உ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை துறைமுக அதிகாரசபையிடமிருந்து கம்பனிக்கு கிடைக்க வேண்டிய பண மீதி ரூபா 11,519,327 ஆகக் காட்டப்பட்டிருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறு இலங்கை துறைமுக அதிகார சபையிடமிருந்து கம்பனிக்கு வழங்கப்பட்ட மீதிகளை உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் அதிகாரசபைக்குச் செலுத்த வேண்டிய பணம் ரூபா 10,198,415 ஆகக் காட்டப்பட்டிருந்தது. இதற்கிணங்க அறவிடப்பட வேண்டிய மீதியில் ரூபா 1,320,912 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | இணங்குகின்றேன். இந்த வித்தியாசத்திற்கு காரணமானது மூன்று நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மூன்று இன்வொயிஸ்களின் பெறுமதியான ரூபா 1,320,912 தொகை அந்த நிறுவனத்தினால் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு செலுத்தப்படாமை யினாலாகும். அப்பணத்தை உரிய நிறுவனங்களிடமிருந்து அறவீடு செய்வதற்காக இலங்கை துறைமுக அதிகாரசபை எங்கள் நிறுவனத்திற்குச் செலுத்திய முகாமைத்துவ கட்டணங்களிலிருந்து அப்பணம் கழித்துக் கொள்ளப்பட்டது. | கம்பனிக்கு கிடைக்க வேண்டிய பண மீதி தொடர்பாக இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் கலந்துரையாடி இறுதி இணக்கப்பாட்டிற்கு வந்ததன் பின்னர் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதன் மூலம் இந்த வித்தியாசத்தைக் குறைத்துக் கொள்ளலாம். |
| (ஊ) | 2013 ஆம் ஆண்டின் போது இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சுகாதார வசதிகளை வழங்குவதற்காக கம்பனிக்கு கிடைக்க வேண்டிய ரூபா 712,290 பணம் சேவைகளை வழங்கி 6 ஆண்டுகள் கடந்திருந்தும் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவீடு செய்யப்பட்டிருக்காததுடன் நட்டத்திற்காக ஒதுக்கீடு செய்தலும் இடம்பெற்றிருக்கவில்லை. அவ்வாறே இந்த பெற வேண்டிய பணம் சம்பந்தமாக மீதிகளின் உறுதிப்படுத்தல் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இணங்குகின்றேன். இது இலங்கை துறைமுக அதிகார சபையின் Pilot station மற்றும் செயற்பாட்டு பிரிவு ஆகிய இரண்டு பிரிவுகளுக்காக எங்கள் நிறுவனத்தினால் சுத்திகரிப்பு சேவையை வழங்குவதற்காக 2014 ஒக்தோபர் மற்றும் 2015 திசெம்பர் மாதங்களில் வழங்கப்பட்ட இரண்டு இன்வொயிஸ்களாகும். இலங்கை துறைமுக அதிகாரசபையினால் எங்கள் நிறுவன்திற்கு பணம் செலுத்தப்பட்டது என்பதற்கு இது தொடர்பாக விசாரணை அனைத்து | தகவல்களைத் தேடிப்பார்த்து (இலங்கை துறைமுக அதிகாரசபையின் மூலம் பணத்தை செலுத்தும் விபரம் முதலியன) பொருத்தமான நடவடிக்கைகள் பின்பற்றப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சந்தர்ப்பங்களிலும் தெரிவிக்கப்பட்டதுடன் இந்த இரண்டு இன்வொயிஸ் களுக்குமாக பணம் கிடைத்திருக்கவில்லை. எதிர்காலத்தில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் நட்டத்திற்காக ஒதுக்கீடு செய்தலினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (எ) கம்பனியின் நிதி நிலைமைக் கூற்றில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நிறுத்தி வைத்தல் வரியாக ரூபா 1,832,607 காட்டப்பட்டிருந்தது. அந்த நிறுத்தி வைத்தல் வரியை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் தீர்த்து வைப்பதற்காக நிறுத்தி வைத்தல் வரிச் சான்றிதழினைச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் கம்பனியிடம் அச்சான்றிதழ்கள் காணப்படாததன் காரணமாக மேற்கூறிய பணத்தை தீர்த்து வைத்தல் சம்பந்தமாக நிச்சயமற்ற நிலைமை காணப்பட்டது. | இணங்குகின்றேன். நிலையான வைப்புக்களுக்காக கணக்கீடு செய்யும் போது நிறுவனத்தினால் அட்டுறு அடிப்படையில் வட்டி வருமானமும் நிறுத்தி வைத்தல் வரியும் ஒவ்வொரு ஆண்டும் திசெம்பர் 31 ஆந் திகதி வரை கணக்கீடு செய்யப்படுகின்றது. எனினும் வங்கியினால் நிறுத்தி வைத்தல் வரிக்காக சான்றிதழ் வழங்குதலானது உரிய முதிர்ச்சியடையும் திகதி வரை மாத்திரமாகும். வருமான வரியினைச் செலுத்தும் போது கழிக்கப்படுதலானது சான்றிதழ்களின் காணப்படுகின்ற அளவு என்பதனால் ஒவ்வொரு ஆண்டும் நிறுத்தி வைத்தல் கணக்கில் ஏதாவது தொகை எஞ்சியிருந்ததுடன் அது முன்கொண்டு செல்லப்படும். | வரிப் பொறுப்பினை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற நிறுத்தி வைத்தல் வரிக்காக உரிய சான்றிதழை வைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) கம்பனியின் 13 எண்ணைத் தாங்கிகளின் எண்ணையை வெளியாக்குவதற்காக நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் பயன்படுத்தாமையினாலான அளவீடு செய்யும் தவறின் | இணங்குகின்றேன். ஐய கன்டேனர் டெர்மினல்ஸ் லிமிட்டட்டினால் சரியான கணக்கு வைக்கும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக Mass | எண்ணையின் அளவுக்காக தொழில்நுட்ப ரீதியாக மேம்படுத்தப்பட்ட முறைமையைப் பயன்படுத்துதல் |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக எஞ்சியுள்ள எண்ணை இருப்பு 546 மெட்ரிக் தொன்கள் இலங்கை சுங்கத் திணைக்களத்தினால் ஆண்டின் போது அரசுடமையாக்கப்பட்டிருந்தது. மேலும், இவ்வாறு மிகுதியாகவுள்ள எண்ணை இருப்பு வருடாந்தம் இலங்கை சுங்கத்தின் மூலம் அரசுடமையாக்கப்பட்டு மீண்டும் விற்பனை செய்யப்படும் வரையான காலத்திற்காக அந்த எண்ணை இருப்பினை களஞ்சியத்தில் வைத்திருப்பதற்காக களஞ்சிய கட்டணம் அறவீடு செய்தல் இடம்பெற்றிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | flow meters பொருத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.<br>சேகரிக்கப்படுகின்ற எண்ணை இருப்பை பறிமுதல் செய்கின்ற காலம் மற்றும் அதனைக் கணித்தல் இலங்கை சுங்கத்தின் மூலம் இடம்பெறுவதனால் அதற்காக எங்கள் நிறுவனத்திற்கு நேரடியாக ஈடுபட முடியாதுள்ளது. | முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |
| (ஆ) | ரூபா 125 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தின் அடிப்படையில் 3200 மெட்ரிக் தொன் கொள்ளளவைக் கொண்ட புதிய பெட்ரோல் தாங்கியினை நிர்மாணிப்பதற்காக ரூபா 50 மில்லியன் தொகையை இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு விடுவிப்பதற்காக 05/19 ஆம் இலக்க 2019 யூன் 20 ஆந் திகதிய பணிப்பாளர்கள் சபைத் தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை பணத்தை விடுவித்தல் அல்லது நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பித்தல் இடம்பெற்றிருக்கவில்லை. | 2019 இன் பணிப்பாளர்கள் சபை அங்கீகாரமானது 2020 சனவரியில் நியமிக்கப்பட்ட புதிய பணிப்பாளர்கள் சபையினால் மேலும் பகுப்பாய்வு செய்யப்பட்டது. மேலும் துறைமுக அதிகாரசபையினால் வேண்டிக் கொள்ளப்பட்ட வங்கிப் பிணை இன்றி உரிய கொடுப்பனவினை மேற்கொள்வதற்கு துறைமுக அதிகாரசபை இணங்கிக் கொண்டதனால் இச்செயற்திட்டத்திற்குரிய உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்காக 2020/05/29 ஆந் திகதி நடைபெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட பணிப்பாளர்கள் சபைக் கூட்டத்தின் போது அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் இச்செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக துரித நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சிக்கல்களை நிவர்த்தி செய்து திட்டமிடப்பட்டவாறு நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 380 (HSFO) எண்ணை வகையில் இலங்கை துறைதுக அதிகாரசபைக்குரிய 72 மெட்ரிக் தொன்களும் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்குரிய 75 மெட்ரிக்தொன்களும் 117 ஆம் இலக்க எண்ணை தாங்கியில் காணப்படுவதுடன் அந்த எண்ணை இருப்பு நீண்டகாலமாக மேற்கூறிய தாங்கியில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த போதிலும், உரிய நிறுவனங்களிலிருந்து களஞ்சியக் கட்டணம் (tank storage Charges) அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இணங்கவில்லை. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான எண்ணை இருப்பிற்காக அறவீடு செய்யப்பட்ட கட்டணத்தை செலுத்துமாறு எங்களால் அடிக்கடி எழுத்து மூலமாக ஞாபகப்படுத்தல் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டது. மேலும் அந்த 2 நிறுவனங்களுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதனால் இன்வொயிஸ் வழங்கும் இயலுமை காணப்படவில்லை. | களஞ்சிய கட்டணத்தை உரிய வேளையில் அறவீடு செய்வதற்கு அவசியமான முறைமையை அறிமுகப் படுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |